


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*




VOL - 5 ISSUE - 2 Editorial : 044-42077328 / 7305837388

## சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற பிரதோஷம் வழிபாடு...



நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் 14.09.20233 அன்று பிரதோஷத்தை முன்னிட்டு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மற்றும் பிரதோஷ நாயனார் சிறப்பு அலங்காரத்தில் பூஜைகள் நடைபெற்றது. ஆதில் பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற உள்ள புரட்டாசி சனிக்கிழமை விசேஷங்கள்...



ஸ்ரீ சிவ -விஷ்ணு ஆலயம்

(4வது குறுக்குத்தெரு, விஜயநகர், வேளச்சேரி, சென்னை - 42)

புரட்டாசி சனிக்கிழமை விசேஷங்கள்

| | | |
|---|---|---|
| 23.09.2023 சனிக்கிழமை | காலை 8.30 மணி | அகண்ட மாவிளக்கு |
| | மாலை 5.30 மணி | திருவேங்கட முடையான் அலங்காரம் |
| 30.09.2023 சனிக்கிழமை | மாலை 5.30 மணி | ஸ்ரீ தேவி பூதேவி ஸமேத ஸ்ரீ மலையப்ப ஸ்வாமி அலங்காரம் |
| 07.10.2023 சனிக்கிழமை | மாலை 5.30 மணி | மூலவருக்கு பூவங்கி சேவை அலங்காரம் |
| 14.10.2023 சனிக்கிழமை | மாலை 5.30 மணி | மாற்று அலங்காரம் (பெருமாள் தாயாராகவும் ; தாயார் பெருமாளாகவும் அலங்காரம்) |

உபயக்கட்டணம்

புரட்டாசி சனிக்கிழமை அலங்காரம் ரூ.3,000/-
பூவங்கி சேவை அலங்காரம் ரூ.5,000/-
புரட்டாசி சனிக்கிழமை பிரசாதம் ரூ.500




Get yourself a step ahead with the constantly evolving field.

A new path to success awaits you!

Our next batch starts on 19th September!!

Join our 45 Days Course plus one month internship opportunity.

Business Contact :Enroll Now : +919342932492 | www.lovikdigitalforum.com



# CLASSIFIED

## VELACHERY
**Laxmipuram before Dandeeswaram Colony**

INDP HOUSE 3BHK, 1 Ground, 1600 Built, CCP, 3P Power, Metro, Bore Water, Safe Area during Flooding, Cyclone, EAST Facing, Rs.3.3Cr

**89399 43999**

---

## TMS YOGA AND ART'S CENTER
SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE

Contact
9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

## RESALE
**VELACHERY SRINIVASA NAGAR**
**Near ISHA Homes, 10mts to MRTS**

2BHK - 710 Sqft / UDS - 355 Sqft / GF / EAST Facing / Rs. 46Lacs

**90030 93204**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

## Mother Land
*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

Contact
**72992 62185**
**90947 52300**

---

## WANTED
*Tele Callers*

CONTACT
**7305837388**

---

## Commercial Space for Rent
600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery*
*( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT
8015427018

---

## WANTED
Front Desk Executive
*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

Contact
**9841030772**

---

## WOMAN'S WELLNESS YOGA CENTRE
**Contact : 9444 122 922**

### TREATMENTS FOR
- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

## CONSULTANT CATERING HOSPITALITY SERVICE
**NFC**
NIMS FOOD CONSULTANT

E. KAMESH KUMAR IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

---

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்
Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் 102.63 | விலை 1 லிட்டர் ₹ 94.24 |

---

## NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY
Online Class for Women and Kids

*FOR ALL AGE CATEGORIES*

CONTACT
**89391 53560**

---

## DESIGNING
Tamil & English DTP designing works Rs. 500/- only

Contact
**7358182075**

---

## WANTED
**LADIES TAILOR**

PRASUDRA Boutique

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*
**4435504719**
**8870393999**

---

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | | 24 கேரட் | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் | 5500 | 1 கிராம் | 5970 |
| | 8 கிராம் | 44000 | 8 கிராம் | 47760 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 77.50 | | |
| | 1 கிலோ | 77500 | | |

Friday Price

---

## TUITION CENTRE @ Velachery
**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact*
**909 494 7285**

---

## Butter Flies
Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen

**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

## SHARAN TRAVELS
All kinds of Tourist vehicle available here
Drivers Available

Contact V. Marimuthu
**9840508030**

---

## RENTAL
LAND BUYING, SELLING

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran
**90809 94500**

---

## SERVICES
Plumbing works

Contact
Govindaswamy
87544 09752

ஆன்மீக தகவல்

# முருகனின் தீவிர பக்தரா நீங்கள்? உங்கள் வேண்டுதலை முருகனிடம் வைப்பதற்கு முன்பாக எந்த முருகனிடம் என்ன வேண்டுதலை வைக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு பிறகு வேண்டுதல் வையுங்கள்.

முருகனுக்கு பல பெயர்கள் உண்டு. பல ஊர்களிலும், பல வடிவங்களில் முருகன் வீற்றிருக்கிறார். முருகனை நாம் பார்க்கும் பொழுது அவர் ஒரே மாதிரி இருப்பது போல் தெரிந்தாலும் உருவத்திலும், சக்தியிலும் வேறுபட்டு தான் திகழ்வார். முருகனுக்குரிய வேண்டுதல் என்று பார்க்கும் பொழுது ஏதாவது ஒரு முருகனின் புகைப்படத்தை வைத்து நம்முடைய வேண்டுதலை வைப்போம். அவ்வாறு செய்யாமல் நம் வேண்டுதலுக்குரிய முருகனை வைத்து வழிபட்டால் நம்முடைய வேண்டுதலை உடனே நிறைவேற்றுவார். இந்த ஆன்மீகம் குறித்த பதிவில் எந்த முருகனிடம் எந்த வேண்டுதலை வைக்க வேண்டும் என்றுதான் நாம் பார்க்க போகிறோம்.

ஒரு ஆணால் உருவாக்கப்பட்ட பெண்களால் வளர்க்கப்பட்ட கடவுளாக முருகன் திகழ்கிறார். கடன் பிரச்சனை, குழந்தை பாக்கியம், திருமண தடை, வீடு கட்டும் யோகம், செவ்வாய் பகவானால் ஏற்பட்ட தடைகள், தாமரங்கள் இவை அனைத்தும் நீங்குவதற்கு நாம் முருகப்பெருமானை வழிபடுகிறோம். மேலும் அவருக்குரிய திதியான சஷ்டி திதி அன்றும், அவருக்குரிய நட்சத்திரமான கிருத்திகை நுட்சத்திரம் மற்றும் அவருக்குரிய கிழமையான செவ்வாய்க்கிழமை அன்றும் நாம் முருகனை நினைத்து வழிபாடு மேற்கொண்டு வருகிறோம்.

அப்படிப்பட்ட முருகனை மூன்று வகைகளில் பிரிக்கலாம். அவை தான் பாலமுருகன், சுப்ரமணியன், சண்முகம். இரண்டு கைகளை மட்டுமே கொண்டு இருப்பவராக திகழக் கூடியவர் தான் பாலமுருகன். இவர் குழந்தை வடிவில் இருக்கக்கூடியவர். குழந்தை பாக்கியம் வேண்டி விரதம் இருப்பவர்கள் பாலமுருகனை வழிபட்டு வந்தால் எவ்வளவு விரைவில் குழந்தை பாக்கியம் கிட்டுமோ அவ்வளவு விரைவில் கிட்டும் என்று கூறப்படுகிறது.

அடுத்ததாக நாம் பார்க்கப் போபவர் சுப்ரமணியர். நான்கு கரங்களை உடையவராக இருக்கக்கூடியவர் தான் சுப்பிரமணியர். இவரை நாம் வணங்கினால் திருமண தடைகள் அகழும் என்றும் கூறப்படுகிறது. திருமணத்தடை நீங்க முருகன் ஆலயத்திற்கு செல்பவர்கள் சுப்பிரமணியர் வீற்றிருக்கும் ஆலயமாக பார்த்து சென்று பரிகாரங்களை மேற்கொண்டால் விரைவிலேயே திருமணம் கைகூடும்.

மூன்றாவதாக நாம் பார்க்கப் போகும் முருகன் தான் சண்முகம். இவர் 12 திருக்கரங்களையும், ஆறுமுகங்களையும் கொண்டவராக திகழக் கூடியவர். இவரை நாம் வழிபட்டால் இவர் நம்முடைய எதிரிகளை சம்காரம் செய்து நமக்கு நல்ல வழியை காட்டுவார் என்று கூறப்படுகிறது.

நம்முடைய வேண்டுதலுக்கு ஏற்றவாறு எந்த முருகனை வழிபட வேண்டும் என்று நினைவில் வைத்துக் கொண்டு அவருடைய புகைப்படத்தை வீட்டில் வாங்கி வைத்து நாம் வழிபட்டால் நம்முடைய வேண்டுதல் கூடிய விரைவில் நிறைவேறும் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தாயும் தந்தையும் பெற்றோர்கள் தான். இருப்பினும் தாயிடம் கேட்கும் பல விஷயங்களை தந்தையிடம் கேட்க மாட்டோம். அதே போல் முருகன் என்று பார்த்தால் அனைவரும் ஒருவர் தான். இருப்பினும் நம்முடைய தேவைகளுக்கு ஏற்றவாறு எந்த முருகனை வழிபட வேண்டும் என்பதை நாம் உணர்ந்து செயல்பட்டால் நம் வாழ்க்கையில் வெற்றிகளை நம்மால் எளிதில் அடையமுடியும்.

விவசாயம் காப்போம்

# சணல் சாகுபடி முறை மற்றும் பயன்கள்

சணல் -இதன் தாயகம் ஆப்ரிக்கா என்று கூறப்படுகிறது. இது பாரம்பரிய கோர்கோருஸ் டிலாசியே குடும்பத்தைச் சேர்ந்த தாவரமாகும்.

பண்டைய காலத்திலேயே சணல் உற்பத்தி செய்து பயன்படுத்தி வந்துள்ளனர். ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய கண்டத்திலேயே சணல் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் கட்டுப்பாட்டில் இந்தியா இருந்த பொழுது சணல் வர்த்தகத்தை முதன்மையாக வைத்திருந்தனர்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் சணலை குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து இங்கிலாந்தில் அதிக விலைக்கு விற்று வந்தனர்.

எப்படி பயிரிடுவது'?

<u>இரகங்கள்</u>

ஒலிட்டோரியல் சணல் - ஜே.ஆர்.ஓ 524, 878, 7835, கேப்சுலாரிஸ் சணல் - ஜே.ஆர்.சி 212,321,7447 ஆகிய இரகங்கள் சாகுபடி செய்ய ஏற்ற இரகங்கள் ஆகும்.

<u>பருவம்</u>

மாசி - வைகாசி மாதங்கள் ஏற்ற பருவம் ஆகும்.

<u>மண்</u>

மணல் கலந்த வண்டல் மற்றும் களிமண் வகைகள் சாகுபடிக்கு ஏற்றது. கேப்சுலாரில் சணல் வகை நீர் தேங்கும் நன்செய் நிலங்களிலும் வளரக்கூடியது. ஆனால் ஒலிட்டோரியல் சணல் வகை நீர் தேங்கும பகுதிகளில் வளராது.

<u>விதையளவு</u>

எக்டருக்கு வரிசை விதைப்பு முறையில் ஒலிட்டோரியல் 5 கிலோ, கேப்சுலாரிஸ் 7 கிலோ தேவைப்படும். தெளிப்பு முறையில் ஒலிட்டோரியல் 7 கிலோ, கேப்சுலாரிஸ் 10 கிலோ தேவைப்படும்.

<u>நிலம் தயாரித்தல்</u>

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை மடக்கி உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின் போது ஐந்து டன் மக்கிய தொழு உரம் இட்டு உழவு செய்ய வேண்டும். எக்டருக்கு 20 கிராம் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ப பாத்திகள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

<u>விதைத்தல்</u>

ஒலிட்டோரியல் இரகங்களுக்கு 25 ஓ 5 செ.மீ இடைவெளியும், கேப்சுலாரிஸ் இரகங்களுக்கு 30 ஓ 5 செ.மீ இடைவெளியும் விட்டு வரிசை விதைப்பு முறை அல்லது தெளிப்பு முறையில் விதைக்க வேண்டும்.

<u>நீர் நிர்வாகம்</u>

விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்பு மூன்றாம் நாள் உயிர்த்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆதன்பின் நான்கு நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும்.

<u>ஊரங்கள்</u>

ஒவ்வொரு முறையும் களை எடுத்த பின்பு அல்லது 20-25 நாட்கள் மற்றும் 35-40 நாட்களில் 10 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும். வறட்சியான காலங்களில் 8 கிலோ யூரியாவை 2 சத குரைசலாக ஒரு லிட்டருக்கு 20 கிராம் என்ற ஆளவில் 40-45 நாளிலும் மற்றும் 70-75 நாளிலும் தெளிக்கலாம்.

<u>பாதுகாப்பு முறைகள்</u>

<u>களை நிர்வாகம்</u>

விதைத்த 20-25 நாட்களில் ஒரு முறையும், 35-40 நாட்களில் ஒரு முறையும் களை எடுக்க வேண்டும் . இல்லையெனில் புளுகுளோரலின் களைக்கொல்லியை ஒரு எக்டருக்கு 1.5 கிலோ என்ற அளவில் விதைத்த மூன்றாம் நாள் தெளித்து, உடனே நீர்ப்பாய்ச்சவேண்டும். இதைத் தொடர்ந்து 30-35 நாட்களில் ஒரு கைக்களை எடுத்தால் போதுமானது.

<u>பயிர் பாதுகாப்பு</u>

இதில் பெரும்பாலும் நோய் தாக்குதல் காணப்படுவது இல்லை.

<u>அறுவடை</u>

சணல் சாதாரணமாக 100 - 110 நாட்களில் அறுவடைக்கு வரும். நமது தேவைக்கேற்ப 135 நாட்கள் கழித்தும் அறுவடை செய்யலாம். அறுவடை செய்யப்பட்ட சணல் செடிகள் வயலில் 3-4 நாட்கள் பரப்பப்பட்டு இலைகளை உதிர்த்தி வைக்க வேண்டும். அதன் பிறகு மெல்லிய மற்றும் உருண்ட தண்டுகள் தனியாக பிரிக்கப்பட்டு கத்தைகளாக கட்ட வேண்டும்.

<u>மகசூல்</u>


ஒரு எக்டரில் கிடைக்கும் செடிகள் 45-50 டன்கள் வரை எடை உள்ளது. இதிலிருந்து எக்டருக்கு சுமார் 20-25 டன் சணல் கிடைக்கும்.

# அழகிய கடல்கன்னி

நீதி கதை

ரொம்ப காலத்துக்கு முன்னாடி , கடலுக்கு அடியில ஒரு ராஜாங்கம் இருந்துச்சு,அங்க நிறய கடல் கன்னிகள் வாழ்ந்துகிட்டு வந்துச்சுங்க


அந்த ராஜாங்கத்த ஒரு கடல் கன்னி அரசர் ஆட்சி செஞ்சுகிட்டு வந்தாரு





அவருக்கு ஆறு பொண்ணுங்க இருந்தாங்க ,அவுங்க எல்லாரும் ரொம்ப அழகா இருந்தாங்க.

இருந்தாலும் கடைசி பெண் கடல் கன்னி எல்லாரையும் விட ரொம்ப அழகா இருந்துச்சு.







அவ பெரியவளா ஆனதுக்கு பிறகு ஒருநாள் ,அவுங்க பாட்டி அவள கூப்பிட்டு , இந்த கடல் மட்டும் உலகம் இல்லை ,கடலுக்கு வெளியில இன்னொரு உலகம் இருக்கு,அதுல மனிதர்கள் வாழ்த்துகிட்டு இருக்காங்கனு சொன்னாங்க,


இப்ப நீ பெரியவளாகிட்டதால உனக்கு வெளியில போய் பாக்க அனுமதி கொடுக்குறேன் வெளி உலகத்தை போய் பாத்துட்டு வானு சொன்னாங்க

உடனே கடல் மட்டத்துக்கு மேல வந்த அந்த கடல் கன்னி தென்றல் காற்று பட்டதும் சொக்கி போய் ஒரு பாறை மேல உக்காந்து இயற்கையை ரசிக்க ஆரம்பிச்சா





அப்பத்தான் அந்த பக்கமா ஒரு படகு போச்சு ,அந்த படகு அந்த நாட்டு அரசரோட படகு ,அதுல இளவரசரோட பிறந்தநாள் கொண்டாடிக்கிட்டு இருந்தாங்க







துரத்துல இருந்து இளவரசர பார்த்த கடல் கன்னிக்கு அவன ரொம்ப பிடிச்சி போச்சு ,அவனோட பேசணும் நட்ப்பு வச்சிக்கிடணும்னு ரொம்ப ஆசைப்பட்டா

அப்ப திடீர்னு கடல்ல புயல் அடிக்க ஆரம்பிச்சுச்சு ,உடனே அந்த படகு முழுகிடுச்சு ,அதுல இருந்த எல்லாரும் நீச்சல் அடிக்க ஆரம்பிச்சாங்க.

சின்ன பையனான இளவரசன் நீச்சல் அடிக்க முடியாம தவிச்சான் ,அப்ப கடல்ல குதிச்சி கடல் கன்னி அவன காப்பாத்தி கரைல படுக்க வச்சா





அதுக்கு அப்புறமா என்ன செய்யணும்னு தெரியாம கடல்ல குதிச்சி கடல் கன்னி நல்ல குடிநீர் எடுக்க போனா

அவ திரும்பி வந்து பாக்குறப்ப ,இன்னொரு படகு அங்க நின்னுகிட்டு இருந்துச்சு ,அதுல இருந்து பக்கத்து நாட்டு இளவரசி இளவரசனை காப்பாத்திக்கிட்டு இருந்தாங்க

கண்ணுமுழிச்சி பார்த்த இளவரசர் தன்னை காப்பாத்துனது இந்த பக்கத்து நாட்டு இளவரசினு நினைச்சுட்டான்,அவளுக்கு நன்றி சொல்லிட்டு அவளோட படகுல ஏறி அரண்மனைக்கு போய்ட்டான் அந்த இளவரசன்

மீண்டும் அந்த இளவரசனை பார்க்கணும்னு நினச்ச கடல்கன்னு ,கடல்ல இருக்குற ஒரு சூனிய கரிக்கிட்ட உதவி கேட்டா

நான் உனக்கு நடக்க கால்களும்,வெளியில போக அனுமதியும் தாரேன் ஆனா இனிமே உன்னால பேச முடியாது,உனக்கு ஒருநாள் தான் அனுமதி அதுக்கு அப்புறமா இந்த கடல்ல கரைஞ்சு கடல் நுரையா மாறிடுவ உனக்கு சம்மதமானு கேட்டா கிழவி






அதுக்கு அந்த கடல் கன்னி சரினு சொன்னா ,உடனே இந்த உதவிக்கு கைமாறா உன்னோட குரலை நான் எடுத்துக்குவேன்னு சொல்லுச்சு அந்த கிழவி ,அதுக்கும் அந்த கடல் கன்னி சரினு சொல்லுச்சு,உடனே மந்திரம் சொன்னா அந்த கிழவி ,உடனே அவளோட வால் மறைஞ்சு கால்கள் வந்துச்சு கடல்கன்னிக்கு

இளவரசனை பார்க்க அரண்மனைக்கு போனா அந்த கடற்கன்னி ,ஆனா அங்க இருந்த காவல் காரங்க அவள உள்ள விடல ,அப்பத்தான் அரண்மனைல இருந்து பாட்டு சத்தம் கேட்டுச்சு ,உடனே நடனம் ஆட ஆரம்பிச்சா கடல் கன்னி உடனே அவளை உள்ள கூட்டிட்டு போனாங்க காவலர்கள் ,





அங்க போனதுக்கு அப்புறமாத்தான் தெரிஞ்சது இளவரசருக்கு அந்த பக்கத்து நாட்டு இளவரசிக்கும் இன்னைக்கு திருமணம்னு,உள்ள வந்ததும் கடல் கன்னியா அடையாளம் கண்டு பிடிச்சா அந்த இளவரசி ,நீதானா இவரை கடல்ல இருந்து காப்பாத்துனனு கேட்டா

தன்னோட குரலை சூனிய கார கிழவிக்கு கொடுத்ததால பேச முடியல அவளால , ஆமான்னு தலைய மட்டும் ஆடுனா ,உடனே அவளுக்கு நன்றி சொன்னா அந்த இளவரசி ,நீ திரும்ப கடலுக்கு போனதும் நான் அங்க வந்து இவரை சந்திச்சேன் அதனாலதான் இந்த திருமணம் நடக்குதுன்னு சொன்னா





அப்ப அங்க வந்த இளவரசருக்கும் உண்மை தெரிய வந்துச்சு ,உடனே அவனும் நன்றி சொல்லிட்டு ,திருமண விருந்து கடல்ல படகுல நடக்க போகுதுனு சொல்லி அவளையும் கூட்டிட்டு போனான்.

என்னதான் தான் இளவரசரை காப்பாத்துனாலும் இங்க இருக்குறவங்க எல்லாரும் நல்லவங்கனு புரிச்சிகிட்டா ,கடல் கன்னி

அப்பத்தான் கடல்ல இருந்து சத்தம் வந்துச்சு ,யாருனு பார்த்தா கடல் கன்னி ,அங்க அவளோட சகோதரிகள் நீந்திக்கிட்டு இருந்தாங்க,ஆனா அவுங்களோட அழகான கூந்தல் இல்லாம இருந்துச்சு

நாங்க எங்களோட கூந்தலை அந்த சூனியக்கார கெழவிகிட்ட கொடுத்து ,இந்த மந்திர கத்திய வாங்கிட்டு வந்திருக்கோம் ,






இத்தவச்சு ,அந்த இளவரசன குத்து நீ பழையபடி கடல் கன்னியா மாறிடலாம்னு சொன்னாங்க

அந்த கத்திய வாங்குன கடற்கன்னி இளவரசனும் இளவரசியும் நல்லவங்க அவுங்க ரொம்ப நாள் வாழணும்னு நினச்சு ,கத்திய கடல்ல தூக்கி போட்டுட்டா

அதுல இருந்து மாய கடல் கன்னியா கடலில விழறவங்கல காப்பாத்துற கடவுளா மாறிட்டா அந்த கடல் கன்னி





# BOOK REVIEW OF THE WEEK

Hey guys today we're reviewing ***Harry Potter and The Prisoner of Azkaban.*** So, this book is about Harry finding his godfather. Interestingly this is the only book where Voldemort does not make an appearance. His godfather's name is Sirius Black. The book starts with Marge's visit to the Dursley house. Harry accidentally blows up Aunt Marge and gets on the Knight Bus. He then goes to Hogwarts after a close encounter with the Grim and a Dementor. During his Defence Against the Dark Arts lesson, Harry summons a Boggart that scares everyone to death and learns the Patronus and wards off dementors. I'm going so fast because this book has a complicated plot especially near the end. Harry then goes to the shrieking shack and Lupin transforms into a werewolf. Sirius then shows up and captures Peter Pettigrew who pretended to be Scabbers, Ron's pet rat. Ron gets injured and Sirius gets captured. So, Harry and Hermione go back in time using time turners from Dumbledore and save Buckbeak, who they use to save Sirius. Harry in this book is the best he has ever been. He is really interesting in this book. Hermione is the second-best character in the book as her best moments are in the end. I don't have much to say about Ron. He is not given anything to do. He is just a funny comic relief character. Hagrid is nice in this. Remus and Sirius are wholesome even when they tell the story of the Marauders.

Overall review:

Easily the second – best book in the series. A surreal experience to read.



**Yeddanapudi Jeyan**
Class 6
Delhi Public School,
Nacharam,
Telangana.

## பழமொழி

*__பழமொழி__*

*வந்ததை வரப்படுத்தடா வலக்காட்டு ராமா?*

*__பொருள்__*

*மற்ற வரவேண்டிய கடன்களைப் பற்றிக் கவலைப்படாமல் திவாலானவன் ஒருவனிடம் கடன் வசூலிப்பதில் வீரம் காட்டும் ஒரு பற்றாளரைக் குறித்துச் சொன்னது. முதலில் வரவேண்டியதை ஒழுங்காக வசூல் செய்துவிட்டுப் பின் வராத கடன்களைப் பற்றி யோசிக்கவேண்டும் என்பது செய்தி.*

*__தமிழ் விளக்கம்__*

*அது என்ன வலக்காட்டு ராமா? வலம் என்றால் வலிமை, கனம், ஆணை. ராமன் என்பது ஒருவனைக் குறிக்கும் பொதுச்சொல். வலம் காட்டும் ராமன் என்பது வலக்காட்டு ராமனாகி யிருக்கலாம்.*

## திருக்குறள்

[ 1085 ]



கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து.


Is it death, eye or doe? All three
In winsome woman's look I see.

## ONE WORD SUBSTITUTION

- ***Ecophobia - Fear of one's home***
- ***Zoophobia - Fear of animals***
- ***Claustrophobia - Fear of closed space***
- ***Hydrophobia - Fear of water***
- ***Bibliophobia - Fear of books***



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,






# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் முழுவதும் உங்கள் குழந்தையின் கல்விக்காக நல்ல தொகையை செலவிட வேண்டியிருக்கும். நீங்கள் அதிக நிதி நெருக்கடியை சந்திக்க நேரிடும்.



**ரிஷபம்**

இந்த வாரம் நீங்கள் ஆடம்பரங்களை அனுபவிப்பதில் பிஸியாக இருக்கப் போகிறீர்கள், உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க நேரம் இருக்காது.



**மிதுனம்**

இந்த வாரம் உங்கள் குடும்ப வாழ்க்கையில் அனைத்து வகையான ஏற்ற தாழ்வுகளிலிருந்தும் முழுமையான நிவாரணம் பெறுவீர்கள்.



**கடகம்**

இந்த வாரம் பணத்தேவை அதிகமாக இருக்கலாம். வாழ்க்கையில் பணத்தின் முக்கியத்துவம் என்ன என்பதை இந்த நேரத்தில் நீங்கள் புரிந்து கொள்ளலாம்.



**சிம்மம்**

இந்த வாரம் உங்கள் சுபாவத்தில் நிலையற்ற தன்மை காணப்படும். உங்கள் இயல்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்கள் மேம்படுத்த வேண்டும்.



**கன்னி**

இந்த வாரம், உங்களின் சில முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்படும், இது உங்களுக்கு நல்ல மற்றும் புதிய நிதி லாபத்தைத் தரும்.



**துலாம்**

இந்த வாரம் நீங்கள் ஒருவித பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது உங்களின் பிஸியான வழக்கத்தில் இருந்து சிறிது நிவாரணம் அளிக்கும்



**விருச்சிகம்**

இந்த வாரம் பணியிடத்தில் எல்லாம் உங்களுக்கு எதிராக நடக்கும், உங்கள் மேலதிகாரிகளும் உங்கள் மேலதிகாரிகளும் உங்கள் மீது கோபமாக இருக்கலாம்.



**தனுசு**

இந்த வாரம், பாத்திரங்கள் மற்றும் துணிகளை துவைப்பது போன்ற வீட்டு வேலைகளில் நாள் முழுவதும் செலவிடுவது பலருக்கு மிகவும் சுமையாக இருக்கும்.



**மகரம்**

இந்த வாரம் நீங்கள் விரைவாக பணம் சம்பாதிப்பதற்காக ஒருவித குறுக்குவழியை பின்பற்றலாம், நீங்கள் விரும்பாவிட்டாலும் சட்டவிரோத சிக்கலில் சிக்குவீர்கள்.



**கும்பம்**

நீங்கள் நல்ல மற்றும் சுவையான உணவை உண்ணும் வாய்ப்பைப் பெறுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபடும் தொழிலதிபர்களுக்கு இந்த வாரம் நல்ல லாபம் கிடைக்கும்.



**மீனம்**

இந்த வாரம் முழுவதும், உங்கள் மேலதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளின் முழு பாராட்டுகளையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

# YOGASANAM

## பாதஹஸ்தாசனம்

***பலன்கள்:-***


உடல் முழுவதற்கும் நல்ல நீட்சியை (stretch) கொடுக்கிறதுளூ குறிப்பாக, hamstrings-ற்கு நல்ல நீட்சியை அளிக்கிறது.

பீனியல் மற்றும் அட்ரீனல் சுரப்புகளின் பணிகளை செழுமைப்படுத்துகிறது.

உடலின் மேல் பகுதிக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது.

முதுகுத்தண்டை நலமாக வைக்க உதவுகிறது.

வயிற்று உப்புசம், வாய்வு போன்ற வயிற்று கோளாறுகளை போக்க உதவுகிறது.



சிறுநீரகத்தை பலப்படுத்துகிறது.

கண் பார்வையை தெளிவாக்குகிறது.

காது கேட்கும் திறனை அதிகரிக்கிறது.

மன அழுத்தத்தைப் போக்க உதவுகிறது.

***செய்முறை:-***

விரிப்பின் மீது நேராக நிற்கவும். இரண்டு கால்களுக்கிடையே சற்று இடைவெளி விட்டு நிற்கவும்.

மெதுவாக மூச்சை விட்டுக் கொண்டே முன்னால் குனியவும்.

உங்கள் கைகளை தரையை நோக்கி கொண்டு வரவும்.

உள்ளங்கைகளை மேல் நோக்கி திருப்பி, பாதங்களின் அடியில் வைக்கவும்.

அவ்வாறு வைக்கும்போது உங்கள் கால் விரல்கள் உங்கள் மணிக்கட்டை தொடுமாறு இருக்க வேண்டும்.

உங்கள் கை முட்டியை பக்கவாட்டிலோ முன் நோக்கியோ வைக்கலாம்.

தலை கீழ் நோக்கி இருக்க வேண்டும்.

20 வினாடிகள் இந்த நிலையில் இருந்த பின் பழைய நிலைக்கு திரும்பவும்.

# அழகு குறிப்பு

<u>சருமத்தை பளபளக்க செய்யும் வாழைப்பழம்</u>

வாழைப்பழத்தில் வைட்டமின் C உள்ளது. இது உங்களுக்கு வரும் தோல் சுருக்க பிரச்சனையை சரிசெய்ய பயன்படுகிறது.

இதனில் இருக்கும் ஆக்சிஜனேற்ற பண்பு, சருமத்தின் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்கிறது.

வாழைப்பழம் சருமத்தை இறுக வைத்திருக்க பயன்படுகிறது.

மேலும், வாழைப்பழம் முகத்தின் தோல் நெகிழ்த்திறனுக்கு உதவி சுருக்கத்தை சரி செய்கிறது.

கிளிசரின் சருமத்தை பாதுகாக்கிறது.

சரும நிறத்துக்கும் கிளிசரின் உதவுகிறது.

சந்தனம், சரும வீக்கத்துக்கு நிவாரணம் அளிக்கிறது. மேலும், முகத்தில் ஏற்படும் எரிச்சலுக்கு நன்மருந்தாக அமைகிறது.

சந்தனத்தில் பாக்டீரியா எதிர்ப்பு பண்பு உள்ளது. இது சரும தொற்று வராமல் பாதுகாக்க பயன்படுகிறது.

<u>சரும பளபளப்புக்கு வாழைப்பழத்தை பயன்படுத்துவது எப்படி?</u>

இந்த பேஸ் பேக்கினை தயாரிக்க, வாழைப்பழத்தை மிக்சியில் அரைத்துக்கொள்ளவும்

பிறகு, 2 முதல் 3 சொட்டு கிளிசரினை சேர்க்கவும்

இதோடு, கொஞ்சம் சந்தன பவுடரையும் சேர்த்துக்கொள்ளவும்

இவற்றை நன்றாக கலந்துக்கொள்ளவும்

இந்த பேஸ் பேக்கினை முகத்தில் தடவவும்

20 நிமிடங்களுக்கு அப்படியே வைத்திருக்கவும்

பிறகு சுத்தமான நீரைக்கொண்டு முகத்தை நன்றாக அலசவும்

இதனை வாரத்திற்கு 2 முதல் 3 முறை செய்யலாம். இதனால் உங்கள் முகம் பளபளவென இருக்க தொடங்கும்

# கணபதி ஸ்லோகம்

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பக்ஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

******

வக்ரதுண்டாய ஹூம்
ஓம் நமோ ஹேரம்ப மதமோதித
மம சர்வ சங்கடம் நிவாரயே
ஸ்வாஹா
ஓம் கம் க்ஷிப்ரப்ரசாதனாய நமஹ.

******

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

******

# *Entertainment Corner*

## ARUSUVAI SAMAYAL

## LEFTOVER RICE ROTTI

### *INGREDIENTS*

3 cups cooked rice
1/2 cup onion, finely chopped
2 carrots, grated
4 green chillies, finely chopped
3 sprigs curry leaves, finely chopped
1/4 cup coriander leaves, finely chopped
1 inch ginger, finely chopped
1/2 teaspoon cumin seeds
1 teaspoon salt
3/4 cup idiyappam rice flour
Oil for making rottis

### *INSTRUCTIONS*

Grind the cooked rice in a mixie without adding any water. Just a pulse for a few seconds will do. The ground paste need not be very Smooth. A coarse paste will do.

Transfer the ground paste to a big bowl. To the paste add in the finely chopped onion, grated carrots, green chillies, curry leaves, coriander leaves, ginger, cumin seeds and the salt.

Finally add the rice flour little by little and knead the mixture to a soft dough. Do not add any water.

Make balls out of the dough. A tennis ball size will work for the recipe. While making the balls, wet your hands in water frequently so the dough does not stick to the hands.

Take a banana leaf or a parchment paper. Spread the prepped ball to a six to seven inch size roti. Use your palm to spread the roti. Wet hands frequently so the dough does not stick while spreading.

After shaping the rotti, make small holes on the rotti so it cooks evenly.

Heat a tawa and sprinkle a little oil. Transfer the banana leaf on the tawa. Leave it for a few seconds. Peel the banana leaf. Sprinkle little oil on the rotti. Cover the rotti with a lid and cook for a couple of minutes. Flip the rotti and cook for a minute more.

Rottis are ready. Serve hot!

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 2 | 7 | 8 | 6 | 1 | 3 | 5 |
| 7 | 1 | 3 | 5 | 9 | 4 | 6 | 2 | 8 |
| 6 | 5 | 8 | 3 | 1 | 2 | 7 | 4 | 9 |
| 8 | 6 | 7 | 2 | 5 | 3 | 4 | 9 | 1 |
| 2 | 3 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 | 6 |
| 5 | 4 | 1 | 8 | 6 | 9 | 2 | 7 | 3 |
| 1 | 2 | 4 | 9 | 3 | 5 | 8 | 6 | 7 |
| 9 | 8 | 6 | 1 | 4 | 7 | 3 | 5 | 2 |
| 3 | 7 | 5 | 6 | 2 | 8 | 9 | 1 | 4 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 6 | | 3 | | | | 8 |
| 9 | | | 6 | | | 1 | | |
| | | | | 1 | 9 | | 4 | |
| | | 7 | 3 | | 2 | | | |
| | | 4 | | 7 | | 8 | | |
| | | | 8 | | 6 | 7 | | |
| | 5 | | 7 | 2 | | | | |
| | | 9 | | | 5 | | | 4 |
| 4 | | | | 6 | | 2 | 1 | |

## சொல் விளையாட்டு

1. க __ டா
2.__ ருக் __
3.க __ __ ரு
4.__ மு __ தி
5.இ __ கி __ __ து
6.ஆ __ க__
7.ப __ யா __ ம்
8.__ ர் __ ட __
9.அ __ க __ __
10.__ த் __ __ ல்

விடுபட்ட எழுத்துக்களை கண்டுபிடியுங்கள்

## விடுகதை விளையாட்டு

1. தன் மேனி முழுவதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் -அவள் யார்?

2. படபடக்கும்,பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் -அது என்ன?

3. உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு, -அது என்ன?

4. மாமா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல் -அது என்ன?

5. மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் -அவன் யார்?

6. தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்கமுடியாது -அது என்ன?

7. வீட்டிலிருப்பான் காவலாலி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, -அவர்கள் யார்?

8.கொம்பு நிறைய கம்பு -அது என்ன ?

### சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

1.பழம்
2.தங்கம்
3.காய்
4.காகம்
5.மாங்காய்
6.மாம்பழம்
7.மாற்றம்
8.காயம்
9.மாதம்

### சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1.சோளம் 2.பணம்
3.கொசு 4.பூசனிக்கொடி
5.குடை 6.தொலைபேசி
7.தேங்காய்


Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
*Weekly - News Paper*


37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
*Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm*
*Saturday 9.30 am to 12.30 pm*
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.



உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

TNBIL04133 R.Dis.No.1845/2014



# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி






*Joshua Daniel*
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.


## MEHENDI



## HAND CRAFT



## படத்தில் உள்ள 12 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!











Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH